awaited from the Chief Engineer, P.W.D. (General). Sathanur Reservoir and Cheyyar River are two alternative sources of supply. The actual source for the scheme will be decided after the investigation is completed.

Sri S. M. ANNAMALAI : இதற்காக செலவாகக்கூடியது எவ்வளவு என்று சொல்ல முடியுமா ? பல ஆண்டு காலமாக இந்தப் பிரச்சினை இருந்துகொண்டு இருக்கிறது. ஆண்டுக்கு ஆண்டு தண்ணீர் பற்றுக் குறை அதிகரித்துக்கொண்டு வருகிறது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். ஆகையால் ஏன் சர்க்கார் பரிசீலனை செய்யவில்லை என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. A. MANICKAVELU : இப்பொழுது பரிசீலனை செய்ய உத்திரவிடப்பட்டிருக்கிறது. சிப் என்ஜினியரிடமிருந்து ரிபோர்ட் வந்த பிறகுதான் எவ்வளவு செலவாகும் என்று தெரியும்.

Hospital Advisory Committee

* 545 *Q.*—Sri K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government have received a copy of the resolutions passed by the Hospital Advisory Committee, Ariyalur on 2nd March 1960 requesting (i) for the provision of an overhead tank; (ii) for the construction of a compound wall and (iii) for an increase in the present bed strength; and

(*b*) if so, the action taken thereon?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

Sri K. R. VISWANATHAN : May I know whether such a copy of the resolutions was received by the District Medical Officer and recommendations were made to the Government with regard to these points?

The Hon. Sri M. A. MANICKAVELU : இந்தத் தீர்மானத்தின் நகல் அரசாங்கத்திற்கு இன்னும் வரவில்லை என்று சொன்னேன். இன்னும் படுக்கைகளை அதிகப்படுத்தவேண்டும் போன்ற யோசனைகள் பரிசீலனையில் இருக்கிறது.

Sri K. R. VISWANATHAN : May I know when the report was received by the Government and when the Government propose to take a decision in these matters?

The Hon. Sri M. A. MANICKAVELU : The suggestion of the Head of the Department was received some time back. It is being examined. After it has been examined, necessary action will be taken.

Waste lands

*546 *Q.*—Sri P. G. **MANICKAM** : கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் ஜில்லாவிலே சாகுபடிக்கு லாயக்கானதாக உள்ள தரிசு நிலங்களிலே எத்தனை ஏகரா நிலங்கள் எத்தனை பேர்களுக்கு 1959—1960-ல் விநியோகம் செய்யப்பட்டன ?